# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 102 | வெள்ளிக்கிழமை Friday | 10.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode


# தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு குறித்த ஆய்வுக் கூட்டம்

## முதலமைச்சர் விஜய் தலைமையில் நடந்தது



தமிழக சட்டசபையில் இம்மாத இறுதியில், 2026-2027-ம் ஆண்டுக்கான பொது பட்ஜெட்டும், வேளாண் பட்ஜெட்டும் தாக்கல் செய்யப்பட இருக்கிறது. த.வெ.க. அரசின் முதல் பட்ஜெட் இது என்பதால், தேர்தல் அறிக்கையில் கூறப்பட்ட பல்வேறு வாக்குறுதிகள் இதில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசு, வரவிருக்கும் புதிய நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் தொழில் துறைக்கு முன்னுரிமை அளித்து பல்வேறு புதிய அறிவிப்புகளைச் செயல்படுத்த திட்டமிட்டு வருகிறது. புதிய முதலீடுகளை ஈர்ப்பது மற்றும் மாநிலத்தின் தொழில் கட்டமைப்பை மேம்படுத்துவது தொடர்பான விரிவான ஆலோசனைகளும் நடைபெற்று வருகின்றன

ஆய்வுக் கூட்டம்

இந்த நிலையில், பட்ஜெட் தயாரிப்பு பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது. பட்ஜெட்டில் என்னென்ன அம்சங்கள் இடம்பெற வேண்டும் என்பது குறித்து, ஒவ்வொரு துறை அமைச்சர்கள், அதிகாரிகளுடன் முதல்-அமைச்சர் ஜோசப் விஜய் தினமும் ஆலோசனை நடத்தி வருகிறார்.

அந்த வகையில், சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

முதல்-அமைச்சர் ஜோசப் விஜய் தலைமையில் நடைபெற்ற இந்தக்கூட்டத்தில்,தொழில்துறை அமைச்சர் எஸ். கீர்த்தனா, நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் நெ.மரிய வில்சன்,தலைமைசெயலாளர் மு.சாய்குமார், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமை செயலாளர் ச.விஜயகுமார், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மு.அ.சித்திக் மற்றும் துறைத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் புதிய தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் எங்கெங்கு தொழில் தொடங்க உள்ளன என்பது குறித்து விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. முதலீடுகளை ஈர்ப்பது, வேலை வாய்ப்புகளை அதிகரிக்கமேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இந்த கூட்டத்தில் முதலமைச்சர் விஜய் விரிவான ஆலோசனை மேற்கொண்டார்.

புதிய தொழில்துறை மண்டலங்கள் மற்றும் தொழில்நுட்பம்:மாநிலம் முழுவதும் அதிநவீன விரைவுத் தொழில் மண்டலங்கள் மற்றும் பிரத்யேக செயற்கை நுண்ணறிவு (AI) நகரங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மின்வாகன(EV)உற்பத்தி மற்றும் டிரோன் (Drone) தயாரிப்பிற்கான தனி வழித்தடங்கள் அமைக்கப்படும்.விண்வெளித் துறை மற்றும் பசுமை ஹைட்ரஜன் சார்ந்த புதிய தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கொள்கை 2026: தகுதியான முதலீடுகளுக்கு 25% மூலதன மானியம் மற்றும் பின்தங்கிய மாவட்டங்களில் 50% நில மானியம் வழங்கப்படும். பசுமைமற்றும்தொழில்நுட்ப கிடங்குகளுக்கு சிறப்பு நிதி உதவியும் அளிக்கப்படும்.தமிழ்நாடு சுழற் பொருளாதார முதலீட்டுக் கொள்கை 2026: மறுசுழற்சி மற்றும் வளத் திறன் கொண்ட தொழில்களுக்கு ஊக்குவிப்பு மானியங்கள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது

# “எம்.எல்.ஏ.க்களை வாங்குவதை விடுத்து கர்நாடகாவிடம் நமக்கான நீரை வாங்க கவனம் செலுத்தவும்” எதிர்கட்சி தலைவர் உதயநிதி வலியுறுத்தல்



சென்னை: "எம்எல்ஏக்களை வாங்குவதில் மட்டும் கவனம் செலுத்தாமல், கர்நாடகாவிடம் இருந்து நமக்கு வர வேண்டிய தண்ணீரை வாங்குவதில் தவெக அரசு கவனம் செலுத்த வேண்டும்" என எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர்தனது எக்ஸ்தளத்தில், "கர்நாடகத்தில் இருந்து காவிரி நீரை திறந்துவிட முடியாது' என்றும், நீர் வேண்டும் என தமிழ்நாடு அரசு தரப்பில் யாரும் கேட்கவில்லை" என்றும் அம்மாநில நீர்ப்பாசன அமைச்சர் ராமலிங்க ரெட்டி கூறியிருப்பது,நம் விவசாயிகள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

ஏற்கெனவே பயிர்க்கடன் தள்ளுபடி என்ற பெயரில் விவசாயிகளை ஏமாற்றிய முதல்வர்,கர்நாடக அமைச்சரின் இந்தப் பேச்சுக்கு என்ன பதில் வைத்திருக்கிறார்?

முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சிக்காலத்தில், கடந்த 5 ஆண்டுகள் முழுவதும், சரியாக ஜுன் 12 அன்று மேட்டூர் அணையில் இருந்து குறுவை சாகுபடிக்காகதண்ணீர்திறந்து விடப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு இன்று வரை மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

மேகேதாட்டு அணைக் கட்டும் கர்நாடகத்தின் முயற்சிக்கு எதிராக தமிழ்நாடு சட்டப்பேரவையில் சமீபத்தில் தீர்மானம் நிறைவேற்ற ப்பட்ட போது, அந்த தீர்மானத்தைத் தமிழ்நாட்டின் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும் ஒன்றாகச் சென்று ஒன்றிய அரசிடம் வழங்க வேண்டும் என்று கூறியிருந்தேன். காவிரி மேலாண்மை வாரியத்தின் தீர்ப்பின்படி, ஜுன் மாதம்வழங்கவேண்டிய 9.91 டிஎம்சி தண்ணீரை கர்நாடகம் திறக்காதது குறித்தும் பேசி இருந்தேன். இதற்கெல்லாம் முதல்வர் பதில் ஏதும் சொல்லாத நிலையில், தற்போது ஜூலை மாதம் தர வேண்டிய 32 டிஎம்சி தண்ணீரையும் கர்நாடகம் தர மறுக்கிறது. ஆளுங்கட்சியுடன் திடீர் கூட்டணி அமைத்திருக்கும் கட்சியின் ஆட்சி நடைபெறும் கர்நாடகத்திடம் இருந்து, தமிழ்நாட்டுக்குச் சேர வேண்டியதண்ணீரைமுதல்வர் கேட்டுப்பெற வேண்டும்.

எம்எல்ஏக்களை வாங்குவதில் மட்டும் கவனம் செலுத்தாமல், கர்நாடகாவிடம் இருந்து நமக்கு வர வேண்டிய தண்ணீரை வாங்குவதில் கவனம் செலுத்த வேண்டும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | | |
|---|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் | |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் | |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் | |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | | |

தொடர்புக்கு : ☎ +919444082959


# மத்திய கிழக்கில் மீண்டும் போர் பதற்றம்.. இந்தியா கவலை

ஈரானின் அணு ஆயுத திட்டங்களை முன்வைத்து அந்த நாடு மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் கடந்த பிப்ரவரி 28-ந்தேதி திடீர் தாக்குதல் நடத்தின.

இதில் முதல் நாளிலேயே ஈரானின் உச்சபட்சதலைவர்அயதுல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். அவருடன் அவரது குடும்பத்தை சேர்ந்த சிலரும் உயிரிழந்தனர். இதனால் ஆத்திரமடைந்த ஈரான்,இஸ்ரேல் மீது பதிலடி தாக்குதலை தொடுத்தது. அத்துடன் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்காவின் படைத்தளங்களை குறிவைத்தும் தாக்கியது.

மறுபுறம் லெபனானை சேர்ந்த ஹிஸ்புல்லா அமைப்பினருக்கும், இஸ்ரேல் ராணுவத்துக்கும் இடையேயும் பயங்கர தாக்குதல்கள் நடந்தன.

ஒரு மாதத்துக்கும் மேலாக நீடித்த இந்த போர் ஈரான் மற்றும் லெபனானில் ஆயிரக்கணக்கானோரின் உயிரை பறித்தது. அது மட்டுமின்றி வளைகுடா பிராந்தியம் மட்டுமின்றி ஒட்டுமொத்த உலகையும் பாதித்தது.

இடையில் ஹார்முஸ் நீரிணையையும் ஈரான் மூடியதால் கச்சா எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் போக்குவரத்து முடங்கி இந்தியா உள்ளிட்ட நாடுகள் பாதிப்பை சந்தித்தன.

மேலும் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்ததால் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் கியாஸ் உள்ளிட்டவற்றின் விலை அதிகரித்து சர்வதேச நாடுகளில் மக்கள் பாதிப்புக்கு உள்ளாகினர்.

சுமார் 40 நாட்கள் தீவிர தாக்குதலுக்குப்பின் இருதரப்பும் தற்காலிக போர் நிறுத்தத்தை அறிவித்தன. பின்னர் பெரும் முட்டுக்கட்டைகளுக்குப்பின் கடந்த மாதம் 17-ந்தேதி ஈரான்-- அமெரிக்கா இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.



இதனால் வளைகுடாவில் பதற்றம் மெல்ல மெல்ல தணிந்து வந்தது. ஹார்முஸ் நீரிணை திறக்கப்பட்டு சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் வினியோகமும், அதன் விலையும் மெல்ல மெல்ல சீராகி வந்தது. மேலும் இறுதி ஒப்பந்தம் மேற்கொள்வதற்காக அமெரிக்கா மற்றும் ஈரான் தரப்பில் பேச்சுவார்த்தையும் நடந்து வந்தது. பாகிஸ்தான் மற்றும் கத்தாரின் மத்தியஸ்தத்தில் இது சுமுகமாக நடந்து வந்தது.

இந்நிலையில் மத்திய கிழக்கில் வணிகக் கப்பல்கள் மீது மீண்டும் நடத்தப்பட்ட தாக்குதல்களைத் தொடர்ந்து, மோதல்கள் அதிகரித்திருப்பது மிகுந்த கவலை அளிப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.

மேலும் இந்த தாக்குதல்கள் அமைதியை குலைக்கும் என்பதால், சம்பந்தப்பட்ட நாடுகள் அமைதி காத்து பதற்றத்தைக் குறைக்க வேண்டும். பிரச்னைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.


## செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் வட்டம், நூரோலையில் அமைந்துள்ள அரசு மதுபான கடையை அகற்ற கோரி இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் மற்றும் நூரோலை கிராம மக்கள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

## பொய் புகார் அளித்து, தன்னை மிரட்டி பணம் பறிக்கும் நோக்கில், ஊடகங்கள் மற்றும் சமூக வலைதளங்கள் மூலமா, அவதூறு பரப்பி வரும்

# பிரதீப் ராஜன் மற்றும் வீரமணி ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் பாதிக்கப்பட்டவர் புகார் மனு



கோவை மாவட்டம் வேடப்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் 47 வயதான அன்னக்கிளி. இவர் இன்று கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளரை சந்தித்து புகார் மனு ஒன்றை அளித்துள்ளார். அந்த மனுவில், தனது குடும்பத்தினருடன் இந்த பகுதியில் தான் வசித்து வருவதாகவும், வேடப்பட்டி பேரூராட்சியில், 13வது வார்டு உறுப்பினராகதான் உள்ளதாகவும், வேடப்பட்டி சாலையில் பெட்டிக்கடை வைத்து, பூ வியாபாரம் செய்து வருவதாகவும், அந்த வகையில், கந்துவட்டி தொழில் செய்து, சீட்டு கம்பெனி நடத்தி வருகின்ற பிரதீப் ராஜன் என்பவரை, கடந்த 20 ஆண்டுகளாக தனக்குத் தெரியும், அவர் முறையான ஆவணங்கள் எதுவும் இல்லாமல், பதிவு செய்யப்படாத சீட்டு கம்பெனி நடத்தி, அதன் மூலம் பொதுமக்களின் பணத்தினை ஏமாற்றிவிட்டு பணத்தை திரும்ப செலுத்தாமல் இருந்து வருகிறார். கடந்த ஒன்றரை ஆண்டுகளாக எனக்கும், மேற்படி நபருக்கும் எந்த விதமான, வரவுசெலவுகள் இல்லை எனவும், அவர் கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர், நான் சீட்டு எடுத்துக் கொடுத்த நபர்களுக்கும் 11 லட்சத்திற்கும் மேற்படியான தொகையை செலுத்தாமல் இருந்து வருகிறார். தொடர்ந்து மேற்படி சீட்டு நடத்தி, சீட்டுகளில் பல்வேறு பிரச்சனைகள் ஏற்படும் சமயத்தில் அவர் என்னிடம் உதவி கேட்பார். அந்த சூழ்நிலைகளில் பொதுமக்களிடம் அவருக்காக பேசி பணத்தை விரைவில் தருவார், நான் பெற்று தருகின்றேன் என கூறி பிரச்சினைகளை சரி செய்து தருவதாக நான் கூறியிருந்தேன், ஆனால் பிரதீப் ராஜன் சீட்டு போட்ட நபர்களுக்கு முறையாக பணம் வழங்காமல் ஏமாற்றி வந்தவுடன், பலமுறை அவருக்காகவே நான் கடனை திருப்பிதருவதாகபொதுமக்களிடம் அளித்துள்ளதை, துடுப்புசிட்டாக பயன்படுத்தி, இந்த பிரதிப் ராஜன் மற்றும் அவரது உறவினர் வீரமணி ஆகிய இருவரும் இணைந்து, எனது வீட்டிற்கு வந்து விட்டில் இருந்த பெண்களிடம் தகராறில் ஈடுபட்டார். இதுசம்பந்தமாககாவல்நிலையத்திலும் புகார் அளித்துள்ளேன். தற்பொழுது நான் அவரிடம் பணமோசடி செய்து விட்டதாக, ஊடகங்கள் மற்றும் சமூக வலைதளங்களின் வாயிலாக தொடர்ந்து, தன் மீது அவதூறு பரப்பி வருகிறார், அவர் கூறுவதில் எந்த வித மூதாந்திரமும் இல்லை எனவே அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மனு அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் அருகே அரசம்பட்டு கிராமத்தில் குடிநீர் வேண்டி பொதுமக்கள் திடீர் சாலை மறியல்.

## கச்சிராயபாளையம் அருகே தங்கச்செயின் பறித்த வாலிபர் கைது



கள்ளக்குறிச்சி மாவட்டம் கச்சிராயபாளையம் அருகே பெண் ஒருவர் வேலைக்கு செல்லும்போது கழுத்தில் அணிந்திருந்த 4 பவுன் தங்க தாலி செயினை இரு சக்கர வாகனத்தில் பின்னால் வந்த மர்ம நபர் பறித்து சென்றதாக காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் சம்பவ இடத்திற்கு சென்ற கச்சிராயபாளையம் காவல்துறையினர் CCTV கேமரா உதவியுடன் அடையாம் கண்டு செயின் பறிப்பில் ஈடுபட்ட சங்கராபுரம் வட்டம் துரூர் கிராமத்தைச் சேர்ந்த சுரேஷ் வயது (25) என்ற நபரை கைது செய்து அந்த நபரிடம் இருந்து 25 பவுன் தங்க நகை பறிமுதல் செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது



கள்ளக்குறிச்சி மாவட்டம் நீலமங்கலம் அருகே காவல்துறையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் எதிரிகளிடமிருந்து தடைசெய்யப்பட்ட சுமார் ரூ.2 லட்சம் மதிப்பிலான 107.63 கிலோ குட்கா மற்றும் புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன, இச்சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டு, வழக்குப்பதிவு செய்து சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

## கோவை மாவட்ட செங்கல் லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பாக

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கவுண்டம்பாளையம் எம்.எல்.ஏ. கனிமொழி சந்தோஷிடம் மனுக்கள் வழங்கினர்



கடுமையான டீசல் விலை உயர்வு, லாரிகளுக்கு பொறுத்த படும் ஜிபிஎஸ் கருவிகளின் விலை உயர்வு, சாலை வரி, சேவைவரி என பல்வேறு விலை உயர்வுகளை கண்டித்தும், அதிகபாரம் ஏற்றி வரும் செங்கல் லாரிகளை, தொடர்ச்சியாக அபராதம் விதிக்கும் காவல்துறையினர், மற்றம் ஆர்டிஓ அதிகாரிகள், என பல்வேறு இடையூறுகளை சந்தித்து வரும் செங்கல் லாரி உரிமையாளர்கள் இனி, பாசிங் டன் என்றழைக்கப்படும், அரசு அனுமதி அளித்த அளவில் லாரிகளை இயக்க உள்ளதாகவும், ஜிஎஸ்டி பில்தராதசெங்கல் சூளைகளில் இருந்து செங்கள்களை எடுத்து வர மாட்டோம். மது அருந்தி லாரி ஒட்டுநர்களை லாரிகளை இயக்க அனுமதிக்க மாட்டோம், சீறுடை இன்றி லாரிகளை இயக்க அனுமதிக்க மாட்டோம் அரசு தெரிவித்த அனைத்து வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி தொழில் நடத்துவோம். ஆனால் இதற்கு பல்வேறு இடையூறுகளை நாங்கள் சந்திக்க நேரிடும், அதற்க்கு அரசு எங்களுடன் துனை நிற்க வேண்டும் என்று, கோவை மாவட்ட செங்கல் லாரி உரிமையாளர்கள்சங்கத்தினர், கோவை கவுண்டம் பாளையம் பகுதி தவெக சட்ட மன்ற உறுப்பினர் கனிமொழி சந்தோஷை அவரது அலுவலகத்தில் சந்தித்து கோரிக்கை மனுவை வழங்கினர். மனுவை பெற்று கொண்ட சட்ட மன்ற உறுப்பினர் உங்களது கோரிக்கை நியாமானது தான் இதற்க்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டு கொண்டார். அப்பொழுது கோவை மாநகரில் 5 வட்டார போக்குவரத்து அலுவலகம் அமைந்துள்ளது. எங்களது சங்க கோரிக்கை களின் விதிமுறைகளுக்கு கட்டுபடாமல், அதிக டன் ஏற்றி வரும் வாகனங்களை வட்டார போக்கு வரத்து அதிகாரிகள் ஆய்வு செய்து, அவர்களுக்கும், அரசின் விதிகளுக்கு கட்டு பட்டு வாகனங்களை இயக்க உத்தர விட வேண்டும் என்று தெரிவித்தனர். இதனை கேட்டறிந்த சட்டமன்ற உறுப்பினர் இது குறித்து அமைச்சரிடம் பேசி, இது சம்பந்தமாக விரைவில் நல்ல முடிவை எடுத்து உங்களுக்கு உதவுவதாக தெரிவித்தார் இந்த நிகழ்ச்சியின் பொழுது ஆர்.எஸ்.ஆர் செல்வராஜ், ரமேஷ், ராஜேஷ், அருண் ராஜ், தமிழரசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலினின் ஊர்க்காவல் கண்காணிப்பு திட்டம்



கன்னியாகுமரி மாவட்ட மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றமில்லா சமுதாயத்தை உருவாக்கவும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்.ஸ்டாலின் "ஊர்க்காவல் கண்காணிப்பு திட்டம்" மிக தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் காவல்துறையினரும் பொதுமக்களும் கைகோர்த்து செயல்படுவதுதான்.

மாவட்டம் முழுவதும் உள்ள பல்வேறு கிராமங்களுக்கு உட்கோட்ட அதிகாரிகள், காவல் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் மற்றும் "நம்ம ஊரு காவலர்கள்" நேரடியாகச் சென்று விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். மாவட்டம் முழுவதும் இதுவரை 7,809 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளது.

சிசிடிவி கேமராக்களை பொருத்துவதை பற்றியும் சிசிடிவி கேமராக்களை பயன்படுத்துவதன் மூலம் குற்றங்களை முன்கூட்டியே தடுக்கவும், அசம்பாவிதங்கள் ஏதேனும் நடந்தால் குற்றவாளிகளை மிக விரைவாகக் கண்டறியவும் சிசிடிவி கேமராக்கள் பெரும்துணையாக இருக்கின்றன. மேலும் இதுவரை நமது மாவட்டத்தில் 1,426 சிசிடிவி கேமராக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிராமத்தையும் முழுமையான பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டு வர வேண்டும் என்ற மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் தொலைநோக்கு பார்வையின்படி, மேலும் பல இடங்களில் சிசிடிவி கேமராக்களைப் பொருத்துவது குறித்தும், அதன் அவசியம் மற்றும் நன்மைகள் குறித்தும் பொதுமக்களிடையே விரிவான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

## ராணிப்பேட்டை மாவட்டம் திமிரி ஒன்றியத்தில்

# திருட்டுத்தனமாக ஏரி மற்றும் ஓடைகளிலிருந்து ஜேசிபி எந்திரம் கொண்டு மண் எடுக்கும் டிப்பர் லாரிகள்

## நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை

ராணிப்பேட்டை மாவட்டம் திமிரி ஒன்றியத்திற்கு உட்பட்ட திமிரி சுற்று வட்டார துர்கம், நம்பரை, வெங்கடாவரம், குப்பம், காவனூர், முகமது பேட்டை, மற்றும் தாமரைப்பாக்கம் வளையாத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் அதிகாலை நேரத்தில் திருட்டுத்தனமாக ஏரி மற்றும் ஓடைகளிலிருந்து ஜேசிபி இயந்திரம் கொண்டு மண் எடுத்து டிப்பர் லாரிகளில் புதியதாக வீடு கட்டுவதற்கும், வீட்டுமனை பிரிவு அமைப்பதற்கும், திருமண மண்டபங்கள், அரிசி ஆலை கட்டுவதற்கும், ஏரி மண்ணை வருவாய்த்துறை துணையோடு அதிக அளவில் விற்பனை செய்து வருகின்றனர். இதனால், நிலத்தடி நீர்மட்டம் குறையும் என விவசாயிகள் கூறுகின்றனர். இதேபோல் நேற்று அதிகாலை கணியனூர் கிராமத்தில் திருட்டுத்தனமாக ஜேசிபி எந்திரம் கொண்டு டிப்பர் லாரியில் ஏரி மண் எடுப்பதாக ஆற்காடு வருவாய்த் துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். ஆற்காடு தாசில்தார் கணியனூர கிராமம் கலவை தாலுக்கா

என்று கூறி கலவை தாலுகாவில் உள்ள வருவாய் ஆய்வாளர் இடம

தகவல் தெரிவித்துள்ளார். மேலும் சமூக ஆர்வலர்கள் திமிரி காவல் துறையினருக்கும் தகவல் தெரிவித்துள்ளனர். வருவாய்த் துறையினர் ஏரிமண் கடத்தும் நபர்களுக்கு தகவல்

தெரிவித்ததால் ஏரி மண்ணை வீடு கட்டுவதற்கு சமன் செய்ய மண்ணைஅருகேகொட்டிவிட்டு ஜேசிபி மற்றும் டிப்பர் லாரியை சாலையில் நிறுத்திவிட்டு ஓட்டுநர்கள் தப்பி ஓடிவிட்டனர். தகவல் அறிந்த சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று திமிரி காவல் நிலைய சிறப்பு சப் இன்ஸ்பெக்டர் ஜெய்சங்கர் மற்றும் போலீசார் ஜேசிபி மற்றும் டிப்பர் லாரி மட்டும் உள்ளது . அதில் மண் இல்லாததால் நாங்கள் பறிமுதல் செய்ய முடியாது என திரும்பி வந்துள்ளனர். இதேபோல் தினசரி அதிகாலை 3 மணி முதல் 5:30 மணி வரை திருட்டு மண் எடுப்பதால் போலீசார் அதிகாலை நேரத்திலும் ரோந்து பணியில் ஈடுபட வேண்டும் என பொதுமக்கள் விவசாயிகள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.



# கோவை காளப்பட்டி பகுதியில் அமைந்துள்ள சிஎஸ்ஐ கிறிஸ்துநாதர் ஆலயம், இந்து கோவிலுக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் கட்டப்பட்டுள்ளதாக எழுந்த சர்ச்சை

## உண்மைக்கு புறம்பான தகவல் என்று சிஎஸ்ஐ கிறிஸ்துநாதர் ஆலய கமிட்டி நிர்வாகி ஜோசப் பரபரப்பு பேட்டி



கடந்தசில நாட்களுக்கு முன்பு கோவை மாவட்டம் காளப்பட்டி பகுதியில், அமைந்துள்ள, சிஎஸ்ஐ கிறிஸ்துநாதர் ஆலயம், இந்து கோவிலுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் கட்டப்பட்டுள்ளதாக சமூக வலைதளங்களின் வாயிலாக அதிக அளவில் பேசப்பட்டு சர்ச்சைக்குள்ளானது.இதுகுறித்து காளப்பட்டி பகுதியில் உள்ள சிஎஸ்ஐ கிறிஸ்துநாதர் ஆலயத்தின் கமிட்டி உறுப்பினர், ஜோசப் செய்தியாளர்களை சந்தித்து அதன் உண்மை நிலவரம் குறித்து பேசினார்..அப்பொழுது அவர் கூறியதாவது..

கோவை காளப்பட்டி பகுதியில் கடந்த 24.11.1948 ஆம் ஆண்டு பரிசுத்த தேவாலயம் என்ற பெயரில் இந்த தேவாலயமானது நிறுவப்பட்டது எனவும், அன்று முதல் இந்த தேவாலயமானது இயங்கி வருகின்றது .ஆரம்ப நிலையில் ஒட்டு கட்டடத்தில் இயங்கி வந்த தேவாலயத்துக்கு ஆராதனைக்காக வருகின்ற கிறிஸ்தவர்களின் வருகை அதிகரிப்பதை தொடர்ந்து, சுமார் 1935 சதுர அடி பரப்பில், கூடுதல் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியரிடம்இது குறித்த அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்து, அதற்கான உரிமை கோரப்பட்டது. இது சம்பந்தமாக, 2009 ஆம் ஆண்டுகோவைமாவட்ட ஆட்சியர்,நேரடியாக கள ஆய்வு செய்து, இந்த நிலத்தின் உண்மைத் தன்மை, மற்றும் தேவாலயத்தின் பயன்கள், குறித்து நேரடியாக ஆய்வு செய்து மாவட்ட ஆட்சியர்உரிமைஅளித்துள்ளார். அதன் பின்னர் இந்த புதிய கட்டிடம் கட்டப்பட்டு தற்பொழுது வரை செயல்பட்டு வருகின்றது.ஆனால்இதனை அறியாதசில இந்துத்துவ சக்திகள், வேண்டுமென்றே தேவாலயம், இந்து கோவிலுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் கட்டப்பட்டுள்ளதாக அவதூறுகளை பரப்பி, தேவாலய நற்பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தி வருகின்றனர். இதுகுறித்து அவர்களிடம்எந்தவித ஆவணங்களும் இல்லை. ஆனால் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து தேவாலயத்தின் திருப்பணிகளை தடை செய்ய பார்க்கின்றனர். இந்த தேவாலயத்தின் ஆவணங்கள்,பத்திரங்கள் முறையாக பராமரிக்கப்பட்டு தேவாலயம் நடைபெற்று வருவதால், நிச்சயமாக அவர்கள் தோற்றுப் போவார்கள். உண்மைக்கு புறம்பான தகவல்களை தெரிவித்து நீதிமன்றத்தை திசை திருப்ப பார்க்கும் இந்துத்துவ சக்திகள் மீது, அரசு கடும், நடவடிக்கை எடுக்க வேண்டும்

உண்மைக்கு புறம்பான தகவல்களை பொதுமக்கள் மத்தியில், பரப்பி தேவாலயத்தின் மீது அவதூறு ஏற்படுத்தி வரும் நபர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். இந்த பேட்டியின் பொழுது

சிஎஸ்ஐ தேவாலய கமிட்டி உறுப்பினர் பிரபாகரன், உள்ளிட்ட பலர் உடனிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.




மதுரை மாவட்டம், மதுரா கல்லூரி கூட்டரங்கில் 101 வயதுடைய விடுதலைப் போராட்ட வீரர், காந்தியவாதி, மதுரை முன்னாள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. லட்சுமிகாந்தன் பாரதி, இ.ஆ.ப.,(பணி நிறைவு) அவர்களின் வாழ்க்கையைப் பதிவு செய்துள்ள "சுவடுகளைத் தேடி" என்ற ஆவணப்படத்தை வெளியீட்டு பார்வையிட்டார். லட்சுமிகாந்தன் பாரதி, (பணி நிறைவு) அவர்கள்,முனைவர் எம்.எஸ்.சண்முகம், (பணி நிறைவு) அவர்கள், பத்மஸ்ரீ பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்

# கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் திருமலையாம்பாளையம் பேரூராட்சி தலைவர் புகார் மனு



கோவை மாவட்டம் திருமலையாம் பேரூராட்சி தலைவராக பதவி வகித்து வருபவர் 36 வயதான கவிதா உதயகுமார். இவர் இன்று கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில், காவல் கண்காணிப்பாளரை, சந்தித்து புகார் மனு ஒன்றை அளித்துள்ளார். தொடர்ந்து செய்தியாளர்களைசந்தித்துபேசிய கவிதாஉதயகுமார்கூறியதாவது... கோவை மாவட்டம் திருமலை யாம் பாளையம் பேரூராட்சி, மன்ற தலைவராக கடந்த நான்கு ஆண்டுகளாக இருந்து வருகிறேன். எங்களது பேரூராட்சிக்கு உட்பட்ட, 15 வார்டுகளிலும் மக்கள் பணி, உட்பட அரசின் அனைத்து நலத்திட்டங்களையும் மக்களிடம் கொண்டு போய் சேர்த்து கொண்டு வருகின்றேன். இந்த நிலையில் வார்டு எண்,8, தம்மனம்பாறையில் உள்ள ஒரு தனியார் நிறுவனம் விவசாயத்தி ற்கு பயன்படுத்தப்படும் யூரியா, உரத்தை கர்நாடக மாநிலத்தில் இருந்து கடத்திக் கொண்டு வந்து,இயந்திரத்தின் மூலமாக திரவியமாக உருமாற்றி, அதனை கேரளாவிற்கு கடத்தி வந்தது தெரிய வந்தது.இது சம்பந்தமாக அங்குள்ள,விவசாயிகள் நடத்திய போராட்டத்தில் காவல்துறை, மற்றும் வருவாய் துறை, மாசு கட்டுப்பாட்டு வாரிய துறைஅதிகாரிகள்,ஆய்வுக்கு வந்து உரிய இடத்தை ஆய்வு செய்து சட்டத்திற்கு, புறம்பாக செயல்பட்டு வந்ததை சீல் வைத்தனர். மேற்படி நிறுவனத்தில் பணியாற்றிய ஏழு பேர் மீதும் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்துள்ளனர். இந்த நிலையில் கடந்த 5ம்தேதி, தனியா தொலைக்காட்சி ஒன்றில், வழக்கு விசாரணை நிலுவையில், இருக்கும் பொழுது, திருமலையம் பாளையத்தை சேர்ந்த அதிமுக நிர்வாகி சிலம்பரசன் என்பவர், அந்த நிறுவனத்தைப் பற்றி எதுவும் தெரியாமலும், இந்த நிறுவனம் திருமலையாம் பாளையம் பேரூராட்சியின், அனுமதியோடுசெயல்படுகின்றது எனவும், தலைவர் கவிதா உதயகுமார், மற்றும் 8வது வார்டு உறுப்பினர் ஆனந்தகுமார், ஆகியோருக்கு தெரியாமல் மேற்கண்ட நிறுவனத்தை நடத்திட வாய்ப்பு இல்லை என்று, பொய்யான செய்திகளை தனியார் தொலைக்காட்சிக்கு பேட்டியின் மூலமாக தெரிவித்துள்ளார். இது வேண்டும் என்று, தன் மீதும், தன் பெயருக்கும் களங்கம் ஏற்படும் வகையில் அமைந்துள்ளது. எனது நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் எண்ணத்தோடும், அரசியல் காழ்ப்புணர்ச்சிக்காக, இதுபோன்று பொய்யாக எனது பெயரை கூறி பேட்டி அளித்து, என்னையும், எனது வார்டு உறுப்பினர் ஆனந்தகுமாரின் நற்பெயருக்கும் களங்கும் விளைவிக்கும் எண்ணத்தோடு செயல்படும் அதிமுக நிர்வாகி சிலம்பரசன் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் கேட்டுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# விவசாய நிலங்களுக்கு வழிமறித்து தனியார் சோலார் நிறுவனம் அராஜகம்: 1,500 பனை மரங்கள் வெட்டி அழிப்பு; பரதராமி மக்கள் போராட்டம்



இராணிப்பேட்டை மாவட்டம் திமிரி - கலவை நெடுஞ்சாலையில் உள்ள தனியார் சோலார் பிளான்ட் நிறுவனம் முன்பாக, பரதராமி, மோசூர் மற்றும் கனியனூர் கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான விவசாய பொதுமக்கள் திரண்டு திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

தனியார் சோலார் பிளான்ட் நிறுவனம் விவசாய மக்களுக்கு தங்களின் வாழ்வாதாரமாக விளங்கும் நிலங்களுக்குச் செல்வதற்கான பொதுப்பாதையை வழங்காமல், சுற்றிலும் வேலி அமைத்து தங்களை அச்சுறுத்தி வருவதாக விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர். உடனடியாக தங்களது விவசாய நிலங்களுக்குச் செல்ல நிரந்தர வழிவிட வேண்டும் என்ற முக்கிய கோரிக்கையை முன்வைத்து, கோஷங்களை எழுப்பியவாறு அவர்கள் இந்த மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர் மோசூர், பரதராமி மற்றும் கனியனூர் ஆகிய கிராம எல்லைகளுக்குட்பட்ட பகுதியில், சோலார் நிறுவனத்திற்கு இடையில் சுமார் 200 ஏக்கர் பரப்பளவில் நீர்நிலைகள் மற்றும் இதர அரசுப் புறம்போக்கு நிலங்கள் அமைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த அரசு நிலங்களைத் தசரதன் என்கிற கிராம நிர்வாகஅலுவலர்(VAO), விதிமுறைகளை மீறி அந்த தனியார் சோலார் நிறுவனத்திற்குச் சட்டவிரோதமாகப் பட்டா போட்டுத் தந்துள்ளதாகப் போராட்டக்காரர்கள் பகிரங்கமான ஒரு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர். மேலும், அந்த அரசுப் புறம்போக்கு நிலத்தில் பல ஆண்டுகளாக வளர்ந்து நின்ற சுமார் 1,500 பனை மரங்களைச் சோலார் நிறுவனம் முற்றிலும் வெட்டி, தீயிட்டுக் கொளுத்தி அழித்துள்ளதாகவும், இதற்குப் பின்னால் வருவாய்த்துறையினரின் மிகப்பெரிய சதி ஒளிந்திருப்பதாகவும் பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

வருவாய்த்துறையினர் இந்த தனியார் நிறுவனத்திற்கு முழு உடந்தையாக இருந்து, பெரும் தொகையைக் கையூட்டாகப் பெற்றுக்கொண்டு சோலார் பிளான்ட் நிறுவனம் இந்த அநீதியில் ஈடுபடத் துணையாக இருந்துள்ளனர் என்றும் கிராம மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இந்த நெடுஞ்சாலை மறியல் போராட்டம் காரணமாக அப்பகுதியில் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டதை அடுத்து, தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த திமிரி போலீசார் பொதுமக்களிடம் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தினர். அதிகாரிகளின் உறுதியை ஏற்றுப் பொதுமக்கள் தற்காலிகமாகப் போராட்டத்தைக் கைவிட்டுக் கலைந்து சென்றபோதிலும், தங்களது நியாயமான கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படாவிட்டால், வருவாய்த்துறை மற்றும் சோலார் நிறுவனத்தைக் கண்டித்து மீண்டும் ஒரு மிகப்பெரிய தொடர் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக எச்சரித்துள்ளனர்.

### தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக

# மேட்டுப்பாளையம் முதல் திருநெல்வேலி வரை வாரம் ஒரு முறை மட்டும் இயக்கப்படும் எக்ஸ்பிரஸ் ரெயிலை தினசரி ரெயிலாக இயக்க வேண்டும்

## மத்திய ரெயில்வே அமைச்சருக்கு தபால் மூலமாக மனு அளிக்கப்பட்டது



கோவை சிவாஜி காலனி பகுதியில்தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மண்டலதலைமை அலுவலகம் அமைந்துள்ளது. இதன் மாநில துணைத்தலைவராக வழக்கறிஞர் புஷ்பானந்தம் இருந்து வருகிறார். இவரது தலைமையில் மத்திய ரயில்வே துறை அமைச்சர், அஸ்வினி வைஷ்ணவுக்கு, தபால் மூலமாக மனு அளிக்க பட்டது.

அளிக்கப்பட்டுள்ள மனுவில் கூறப்பட்டுள்ளதாவது.. கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் பகுதியில் இருந்து வாரம் ஒருமுறைதிங்கட்கிழமை மட்டும், திருநெல்வேலிக்கு வாராந்திர ரயில் இயக்கப்பட்டு வருகின்றது. இதே போல திருநெல்வேலியில் இருந்து மேட்டுப்பாளையத்திற்கு ஞாயிறு அன்று புறப்பட்டு கோவை வழியாக மேட்டுப்பாளையத்தை சென்றடைகின்றன.இந்தரயில் வாரத்திற்கு ஒருமுறை மட்டும் சென்று வரும் நிலையில், இதனை தினசரி ரயிலாக அறிவிக்கப்பட வேண்டும், பயணிகளின் போக்குவரத்து சிரமத்தை நீக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இந்த ரயிலில் செல்வதற்காக எப்பொழுது முன்பதிவு செய்தாலும், காத்திருப்பு பட்டியல், 40 முதல் 200 வரையிலும் இருக்கின்றது, தென் மாவட்டத்தைச் சேர்ந்த திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, சாத்தூர், ராஜபாளையம், தென்காசி, மதுரை, போன்ற பல்வேறு பகுதியை சேர்ந்த தென் மாவட்ட மக்கள், கோவை பகுதிகளில் வசித்து வருகின்றனர். அவர்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு செல்வதற்கு, இந்த ரயிலையே அதிகமாக பயன்படுத்துகின்றனர். இதன் காரணமாக அளவுக்கு அதிகமான பயணிகளின் எண்ணிக்கையுடன் இந்த ரயில் இயக்கப்பட்டு வருகின்றது. அதிலும் பண்டிகை நாட்களில் இந்த ரயிலில் பயணம் செய்வது என்பது எட்டாத நிலையாகவே இருந்து வருகின்றது.எனவேஇந்தரயிலை தினசரி ரயிலாக இயக்கப்பட வேண்டும் அவ்வாறு இயக்கப்படும் பட்சத்தில், பயணிகளின் கூட்ட நெரிசல் தவிர்க்கப்படும், தென் மாவட்டங்களில் இருந்து, தொழில் விஷயமாக, வேலை விஷயமாக, கல்வி விஷயமாக, வரும் பலரும் இந்த ரயிலையே நம்பி இருந்து வருகின்றனர்.எனவேஇந்தரயிலை தினசரி ரயிலாக மாற்றி அமைத்துதினசரிஇயக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தென்காசி மாவட்டம் சுரண்டை நகராட்சி பகுதியில்

# படுக்கை வசதியுடன் கூடிய 24 மணி நேர அரசு மருத்துவமனை இல்லை; பொதுமக்கள் புகார்



சுரண்டையில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை அமைக்கவேண்டும்என இப்பகுதி பொதுமக்கள் சுமார் 40 வரேடங்களாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஆனால் தற்போது சுரண்டையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மட்டும் செயல்பட்டு வருகிறது, அதிலும் சுரண்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் கீழ் சுரண்டை, சிவகுரு நாதபுரம், கழுநீர்குளம், வீரகேரளம்புதூர், மேலப்பாவூர், கலிங்கப்பட்டி, ராஜகோபாலபேரி, ராஜபாண்டி,இடையர்தவணை உள்ளிட்ட 10க்கும்மேற்பட்டதுணை சுகாதார நிலையங்கள் உள்ளன இப்பகுதியின் மக்கள் தொகை சுமார் 1,60,000 என கணக்கீட்டுள்ளது.

இந்த பகுதியில் உள்ள பொதுமக்கள் அனைத்து நோய்களுக்கும்சிகிச்சை பெற்று வருவதுடன் சுகர், பிரஸர், ஆஸ்துமா, கொலஸ்டிரால், எலும்பு, இதயம் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு மாதாந்திர மருந்துகளை பெற்று வருகின்றனர் இல்லம் தேடி மருத்துவம் சிகிச்சைக்கும் இங்கிருந்துதான் மருந்துகள் வழங்கப்படுகிறது.

ஆனால் சுரண்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கடந்த இரண்டு மாதங்களாக மருந்து மாத்திரைகள் தட்டுப்பாட்டாகவே உள்ளன. ரெகுலராக போட வேண்டிய மாத்திரைகளில் இரண்டு அல்லது மூன்று மாத்திரைகள் கிடைப்பதில்லை அவைகளை தனியார் மருந்தகங்கள் மற்றும் வீரகேரளம்புதூர், ஆயக்குடி அரசு மருத்துவமனையில் சென்று வாங்கவலியுறுத்துகின்றனர் மேலும் இல்லம் தேடி மருத்துவம் திட்டமும் முடங்கும் நிலை உள்ளது.

இதனால் நோயாளிகள் மற்றும் முதியோர் பல பகுதிகளுக்கு செல்ல முடியாமல் மாத்திரைகளை தொடர்ந்து போட முடியாமல் உள்ளனர். ஏற்கனவே கடந்த சில வாரத்திற்கு முன்பு இரவில் பாம்பு கடித்த நபருக்கு சரியான சிகிச்சை கிடைக்காததால் அவர் இறந்ததும் தற்போது சுரண்டை பகுதியில் மஞ்சள் காமாலை நோயினால் பலர் பாதிக்கப்பட்ட நிலையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருந்து மாத்திரைகள் தட்டுப்பாட்டால் பொதுமக்கள் மேலும் சிரமத்திற்கு உள்ளாவதும் குறிப்பிடத்தக்கது

ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாகநடவடிக்கைஎடுத்து சுரண்டை அருகேஆரம்ப சுகாதார நிலையத்தில் அனைத்து மருந்துகளும் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கவும் சுரண்டையில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை அமைக்கவும் வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்



உயர்கல்வி துறையை மேம்படுத்த அரும்பாடு பட்டு செயலாற்றி கொண்டு வரும் எனது நீண்ட கால நண்பரும் தமிழ்நாடு உயர்கல்வி துறை அமைச்சருமான மாண்புமிகு விஸ்வநாதன் அவர்களை சென்னை தலைமைச் செயலகத்தில் வைத்து தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை மாநில இணை செயலாளர் மற்றும் தவெக பிரமுகர் நாகர்கோவில் ஆர்.எஸ்.ராஜன் சந்தித்து பாராட்டு தெரிவித்தேன்.



ஈரோடு மாவட்ட போதைபொருள் தடுப்பு பிரிவு உதவி ஆய்வாளர் கார்த்தி தலைமையில் தலைமை காவலர் முத்துக்குமார், தலைமை காவலர் சண்முகசுந்தரம், தலைமை காவலர் ஜெகநாதன், காவலர் கார்த்தி, காவலர் கணேசமூர்த்தி ஆகியோருக்கு ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் D.V.கிரண் ஸ்ருதி மாவட்டத்தில் பல்வேறு போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கையில் சிறப்பாக செயல்பட்டதற்காக பாராட்டி பாராட்டு சான்றிதழ்கள் வழங்கினார்.



ஈரோடு வீரப்பன்சத்திரம் அருகே உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு நேற்று (ஜூலை09) கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் விஜய் பாலாஜி ரூ.1 லட்சம் நன்கொடை வழங்கினார். பின்பு மாணவிகளிடம் உரையாடிய அமைச்சர், பள்ளி மாணவர்கள் கல்வி, பொது அறிவு மற்றும் விளையாட்டில் சிறந்து விளங்க வேண்டும் என ஊக்கப்படுத்தினார். இந்நிகழ்வில் ஆசிரியர்கள் மற்றும் தவெக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



ஈரோடு மாநகராட்சி வார்டு எண்:40ல் நேற்று (ஜூலை09) ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினரும், கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சருமான விஜய் பாலாஜி நேரில் ஆய்வு செய்தார். எதிர்வரும் மழைகாலத்தை கையாள்வதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கால்வாய்க்களை தூர்வாரும் பணிகளை நேரில் சென்று ஆய்வு செய்தார். அப்போது மாநகராட்சி அதிகாரிகள் உடனிருந்தனர்.



ஈரோடு மாவட்டகாவல்துறைசார்பில் (ஜூலை.8) அன்று மாவட்டகண்காணிப்பாளர் அலுவலகத்தில் பொதுமக்கள் குறைதீர்ப்பு கூட்டம் நடைபெற்றது. நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்று, விசாரணையை விரைந்து முடித்து நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குஉத்தரவிட்டார்.இந்தநிகழ்வில்மாவட்டகாவல்துணைகண்காணிப்பாளர் மற்றும் காவல் துறை ஆய்வாளர்கள் உடன் இருந்தனர்.

# அரசுப் பேருந்துகளில் 'விடியல்' நீக்கம் ‘மகளிர் பயணம்’ என பெயர் மாற்றிய தவெக அரசு

சென்னை: திமுக அரசு கொண்டு வந்த 'மகளிர் விடியல் பயணம்' என்ற திட்டத்தின்பெயரை 'மகளிர் பயணம்' என தவெக அரசு மாற்றியிருப்பது பேசுபொருளாக மாறியுள்ளது. இதற்கு, "திமுக அரசு வைத்த எல்லா பெயர்களையும் மாற்றுவதையே நோக்கமாக வைத்துள்ளனர்" என திமுக சாடியுள்ளது.

தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து, அரசுப் பேருந்துகளில் மகளிருக்கான இலவசப் பயணத் திட்டத்தின் பெயரில் முக்கிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது. முந்தைய திமுக ஆட்சியில் 'மகளிர் விடியல் பயணம்' என்று அழைக்கப்பட்ட இத்திட்டம், தற்போது தவெக அரசின் கீழ் 'மகளிர் பயணம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இருப்பினும், முந்தைய அரசின் அரசியல் அடையாளங்களை மாற்றும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வரிசையில்,திமுகவின் முக்கிய திட்டங்களில் ஒன்றான 'மகளிர் விடியல் பயணம்' என்ற வார்த்தையை நீக்கிவிட்டு, தற்போது சுருக்கமாக 'மகளிர் பயணம்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதை திமுகவினர் கடுமையாக சாடி வருகின்றனர். ஏற்கெனவே 'நான் முதல்வர் திட்டம்' பெயர்நீக்கப்பட்டதுகடும் விமர்சனத்துக்கு உள்ளானது குறிப்பிடத்தக்கது. திமுக அரசின் திட்டங்களின் பெயர்கள் மாற்றப்பட்டாலும், மகளிருக்கான இலவசப் பேருந்து பயணம்உள்ளிட்டபல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் எவ்வித தடையுமின்றித் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பது கவனிக்கத்தக்கது.இந்நிலையில்,திமுக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன் இது குறித்து செய்தியாளர்களிடம் பேசும்போது, "தவெக அரசு வெறும் பெயர் மாற்றத்துக்கான கட்சியாக மட்டுமே உள்ளது. திமுக அரசு வைத்த எல்லா பெயர்களையும்



மாற்றுவதையே நோக்கமாக வைத்துள்ளனர்.

இந்த திட்டங்களையும் எப்படி செயல்படுத்துகிறார்கள் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். தவெககொடுத்தவாக்குறுதிகளையே நிறைவேற்றவில்லை. விவசாயிகள் உள்ளிட்டோர் அரசுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்" எனத் தெரிவித்துள்ளார்.

# புதிய ரேஷன் அட்டை ஓரிரு வாரங்களில் விநியோகம்: அமைச்சர் வெங்கடரமணன் தகவல்

சென்னை: மாநகராட்சி சார்பில் மயிலாப்பூ ர் தொகுதியில் ரூ.80 லட்சத்தில் கட்டப்பட்ட நவீன பெண்கள் உடற் ப யிற் சிக் கூடத்தை அ மைச்சர் ப. வெ ங் கடரமணன் திறந்துவைத்தார்.

மயிலாப்பூர்தொகுதி, 126-வதுவார்டு,4-வது ட்ரஸ்ட் லிங்க் தெருவி ல் ரூ .80 லட்சத்தில் பு திதாக ந வீன பெண் க ள் உடற்பயிற்சிக் கூடம் அ மைக் கப்பட் டது.இதன்திறப்புவிழா நடைபெற்றது.

இதி ல் உ ண வு மற்றும் உணவுப் பொருள் வழ ங்கல் துறை அமை ச்சர் ப.வெங் கடரமணன் பங்கேற்று உ ட ற் ப யி ற் சி க் கூடத்தை திற ந்து வைத்தார். இது மேயர் மேம்பாட்டு திட்ட நிதியில் ரூ.50 லட்சம், 126-வ து வார்டு மாமன்ற உறுப்பினர் மேம்பாட் டுத்திட்ட நிதியில் ரூ.30 லட்சம் என மொத்தம் ரூ.80 லட்சம் செலவில்




750 சதுர அடி பரப்பளவில் கட் டப்பட்டுள் ளது.இங்குட்ரெட்மில், சைக்கிளிங்,மல்டிஜிம் உள் ளிட்ட உடற்ப யிற்சி கருவிகள் அ மைக்கப் பட்டுள் ளன . இத னால் மந் தை வெ ளிப்பாக்கம், கட ற்கரையோர குடி யிரு ப் புப் பகுதிகளில் உள்ள மக்கள் பயனடைவர்.

மாற்றுத் திறனாளிகளுக்கு உடல் மற்றும் மன ம் சம் பந்தப்பட்ட மறுவாழ்வு சே வைகளை வழங்க அமைக் கப் ப ட்டுள்ள விழு து கள் ஒருங் கி ணைந்த சேவை மை யத்தை பார்வையிட்டார். பின்னர், அப் பகுதியில்உள்ளமாநகராட்சி நடுநிலைப் பள் ளியை பார்வையிட்டு, மாணவ ர் களு ட ன் கலந்துரையாடினார்.

மத் திய வட்டா ர துணை ஆணையர் எச் .ஆர்.கவுஷிக், மாமன்ற உறு ப்பினர் அமிர்தா வர் ஷினி உள்ளிட்டோர் ஆகியோர் உடனி ருந்தனர். பின்னர் செய்தியாள ர்களிடம் பேசிய அமைச்சர்,₹₹புதிய ரே ஷன் அ ட் டைக ள் விநியோகம் ஓரிரு வார ங்களில் தொடங்கப்படும்" என்று தெரிவித்தார்.

# IMD issues landslide warning for Shimla and other Himachal districts; tourists advised caution



The India Meteorological Department (IMD) has issued heavy rainfall and landslide warnings for parts of Himachal Pradesh as active monsoon conditions are expected to persist over the state in the coming days.

According to the latest warnings, there is a possibility of landslides and mudslides in vulnerable areas of Kangra, Kinnaur, Kullu, Mandi, Shimla and Sirmaur districts of Himachal Pradesh. Also read: Weather today LIVE: IMD warns of 200mm rain in Delhi-NCR; tree topples on Kalkaji-Govindpuri Road

The advisory also indicates water flow, and levels are very likely to increase in water bodies across these districts. People have been advised to avoid vulnerable areas and maintain a safe distance from water bodies.

The warning has been issued as part of the IMD's impact-based forecast for Himachal Pradesh during the ongoing Southwest monsoon season. The advisory highlights the potential risks in the identified districts and calls for precautionary measures in areas vulnerable to rain-related hazards.

Shobhit Katiyar, the head of the Meteorological Centre, Himachal Pradesh, stated that heavy rainfall was recorded across the state over the past 24 hours

"Monsoon activity will remain active over Kangra, Kullu, Mandi, Shimla and Sirmaur for the next five to seven days. Heavy rainfall is likely at isolated places almost every day in these districts, while the remaining districts are also expected to receive moderate rainfall over the next four to five days," Katiyar said, according to news agency ANI.

"In view of the forecast, advisories have been issued for Sirmaur, Shimla, Kullu, Mandi and Kangra districts. Although rainfall in other districts is expected to remain mostly moderate, residents should continue to exercise caution," he added.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.